SRI LANKA

PEaCE

# பொறுப்புடன் பயணிப்போம்

**சிறுவர்களை பாதுகாப்போம் சுற்றுலாவை ஊக்குவிப்போம்**



**எங்குமுள்ள சிறுவர்களையும் சூழலையும் பாதுகாக்கும் அமைப்பு**

VicenteFerrer

*Transforma la sociedad en humanidad*

## தன்னார்வ தொண்டு சுற்றுலா (Voluntourism)

தன்னார்வ தொண்டு சுற்றுலா **(Volunteer + Tourism)** என்பது சுற்றுலா பயணி ஒருவர் தனது சுற்றுலா/விடுமுறை காலத்தின் போது இலவசமாக சமூக பணிகளில் ஈடுபடுவது.

இது சமூக பணி, சமுதாய அபிவிருத்தி, சூழல் பாதுகாப்பு, மொழி கற்பித்தல், சுற்றாடல், வன பாதுகாப்பு மற்றும் சுகாதார மேம்பாடு போன்ற துறைகளில் இடம்பெறுகிறது.

தன்னார்வ சுற்றுலா பயணிகள் ஆதரவற்ற சிறுவர்களுக்கான இல்லங்கள்

சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் மற்றும் மாணவர்களோடு பணி புரியும்போது நெருக்கமாக பழகுவதுண்டு.

ஆதரவற்ற சிறுவர்களுக்கான இல்லங்கள் தன்னார்வ சுற்றுலா பயணிகள் பற்றி முழுமையாக அறியாமல் அவர்களை சிறுவர்களுடன் பணி செய்ய அனுமதிப்பது சிறுவர்களுக்கு ஆபத்தானது

சுற்றுலா துறையை தவறாக பயன்படுத்தும் சில உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளால் வயது, பால், பின்னணி போன்ற எவ்வித வேறுபாடுகளும் இன்றி சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு பயன்படுத்துகின்றர்.

### தன்னார்வ தொண்டு சுற்றுலா பயணிகளை சேவையில் அமர்த்தும் அமைப்புகளுக்கான அறிவுறுத்தல்

தன்னார்வ சுற்றுலா பயணிகளை பயன்படுத்தும் நிறுவனங்கள் தேசிய விதிமுறைகளை கட்டாயம் பின்பற்ற வேண்டும்.

சேவைக்கு அமர்த்துமுன் தன்னார்வ பயணிகளின் முழுமையான பின்னணி தகவல்கள் சரிபார்க்கப்பட வேண்டும்.

நியமனத்திற்கு முன் குற்றவியல் அறிக்கை, நடத்தைச் சான்று, மருத்துவ அறிக்கை, அனுபவம் மற்றும் கல்வித் தகுதிகள் போன்ற முக்கிய தகுதிகளை பரிசீலிக்க வேண்டும்.

## எமது சிறுவர்களை பாதுகாப்போம்

யாராவது சிறுவர்களை பாலியல் நோக்கத்திற்காக அறிமுகப்படுத்தச் சொன்னால், அது கடுமையான குற்றம் எனத் தெளிவாக எச்சரிக்கவும்.

இயன்றால் அந்த நபரின் பெயர், விவரங்கள் மற்றும் தொடர்புகளை பதிவு செய்து உரிய அதிகாரிகளுக்கு அறிவிக்கவும்.

புகைப்படம் எடுக்க முடிந்தால், அது விசாரணைக்கு மிகப் பயனுள்ளதாக இருக்கும்.

சிறுவர்கள் எளிதில் பாதிக்கப்படுவர்கள். அவர்களை பாதுகாப்பது நம் பொறுப்பு.

**பெற்றோர்களே! பாதுகாவலர்களே! நலன் விரும்பிகளே!**

எமது சிறார்களின் பாதுகாப்பில் அதீத அக்கறை செலுத்துங்கள்!!!

எப்போதும் விழிப்புடனும் இருங்கள்.

யாராவது ஒரு பிள்ளை பாலியல் துஷ்பிரயோகத்தால் பாதிக்கப்பட்டு இருந்தால் அது அவர்களது தவறு இல்லை என்றும் அவர்கள் தனிமை படவில்லை என்றும் எடுத்து சொல்லுங்கள்.

**சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களை புகார்செய்ய பின்வருவோரை நாடுங்கள்**

சிறுவர் மற்றும் மகளிர் துஷ்பிரயோக தடுப்பு பணியகம் (பொலிஸ்): 109 அல்லது 011 244 4444

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை (NCPA): 1929

இலங்கை சுற்றுலா பொலிஸ்: 1912 அல்லது 011 242 1451 /011 238 2209

PEaCE/ECPAT Sri Lanka: 071 273 3037

மின்னஞ்சல்: info@ecpat.lk

இணையத்தளம்: www.ecpat.lk

## சுற்றுலா என்றால் என்ன?

சுற்றுலா என்பது சமூக, கலாச்சார மற்றும் பொருளாதார அம்சங்களை கொண்ட ஒரு நிகழ்வு. இது மக்கள் தங்களது வழமையான இருப்பிடத்தை விட்டு வெளி ஊர்கள் மற்றும் வெளிநாடுகளுக்கு பயணிப்பதைக் குறிக்கிறது.




## எமது நாட்டிற்கு ஏன் சுற்றுலா அவசியம்?

எமது நாட்டின் அந்நிய செலாவணியை பெற்று தருவதில் சுற்றுலாத்துறை மூன்றாம் இடம் வகிக்கின்றது.

பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்புகளுக்கு வழிவகுப்பதோடு பிராந்திய அளவிலான வருமான ஏற்றத்தாழ்வுகளை குறைக்க வழிவகுக்கின்றது.




## சுற்றுலாத்துறையில் நெறிசாரா செயல்கள்

சுற்றுலா பயணிகள் தங்குவதற்கு விரும்பிய ஹோட்டல்கள், உல்லாச விடுதிகள் மற்றும் ஓய்வு மையங்களைத் தேர்வு செய்கின்றனர் சில நேரங்களில் அறிமுகமற்றவர்களின் வீடுகளிலும் தங்குகின்றனர்.

சுற்றுலாத்துறை நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றினாலும், சில பயணிகள் உள்ளூர்வாசிகளின் விருந்தோம்பலை தவறாக பயன்படுத்தி ஒழுங்கு மீறிய செயல்களில் ஈடுபடுகின்றனர்.

துரதிஷ்டவசமாக, சுற்றுலா பல சமூக பிரச்சினைகளை உருவாக்குகிறது அவற்றில் சிறுவர் மற்றும் இளம் பருவத்தினரின் பாலியல் சுரண்டல் முக்கியமான ஒன்று.

பதினெட்டு வயதிற்குட்பட்டவர்களை பாலியல் இச்சைகளுக்காக பயன்படுத்துவது கடுமையான தண்டனைக்குரிய குற்றமாக இருந்தும், அதில் ஈடுபடுபவர்கள் இன்னும் உள்ளனர்.

## தன்னார்வ தொண்டு சுற்றுலாவும் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகமும்

சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் மற்றும் சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் உள்ள சிறுவர்கள் அனைவரும் ஆதரவற்றோர் அல்ல. அவர்களில் அனேகர் வறுமையினாலும் பெற்றோர்களுடைய இயலாமையினாலும் நலிவடைந்த குடும்பங்களாலும் கட்டாயப்படுத்தப்பட்டு சிறுவர் இல்லங்களில் சேர்க்கப்படுகின்றனர்.

துரதிஷ்டவசமாக தன்னார்வத்தொண்டை செய்யும் சில சுற்றுலா பயணிகள் சிறுவர்களை பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்கின்றனர்.

எந்தவொரு கட்டுப்பாடு மற்றும் விதிமுறைகள் பின்பற்றப்படாத தன்னார்வ சுற்றுலா நடைமுறைகளால் சில சுற்றுலா பயணிகள் சிறுவர்களை இலகுவாக குறி வைத்து தமது பாலியல் இச்சைகளுக்கு பயன்படுத்துகின்றனர்.

சட்டம் மற்றும் கண்காணிப்பற்ற தன்னார்வ சுற்றுலா நடைமுறைகள் சிறுவர் பாலியல் சுரண்டலுக்கு எளிதில் வழிவகுக்கின்றது.

## இலங்கையில் சுற்றுலாத்துறை

நமது நாடு இயற்கை அழகால் உலகெங்கிலுமுள்ள சுற்றுலா பயணிகளை தன்வசம் ஈர்க்கின்றது. இலங்கை பல காரணங்களுக்காக மிகவும் விரும்பப்படும் சுற்றுலா தலமாக மாறியுள்ளது. பிரதானமாக இயற்கை அழகு, ஆயுர்வேத சிகிச்சை, கலாசார மற்றும் வரலாற்று இடங்கள், கல்வி நடவடிக்கைகள், மாநாடுகள், சமூக அபிவிருத்தி ஊக்குவிப்பு போன்ற. நோக்கங்களுக்காக விரும்பப்படுகிறது.